எளிய பரிசோதனைகள் வழியே ஊகித்தல், உற்றுநோக்கல், காரணமறிதல் மற்றும் முடிவுக்கு வருதல் ஆகிய திறன்களை ஊக்குவித்தல்.



செயல்பாட்டு நேரம்
விளையாட்டு, குழுச் செயல்பாடுகள் மூலம் ஆராய்தல், ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படுத்தும் திறன்களை மேம்படுத்துதல்.

முதல் பருவப் பாடநூலின் இரண்டு அலகுகளிலும் **வளர்நிலைக் கற்றல்** (progressive learning) அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.



1. நம்மைப்பற்றி...

- நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், உதவவும், ஒன்றாகச் செயல்படவும் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளில் உணர்வுகளை வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்ளுதல்.
- ஐம்புலன்களைப் பயன்படுத்திப் பொருள்களை விவரித்தல்.
- வீட்டிலும், பள்ளியிலும், சுற்றுப்புறத்திலும் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுதல்.



2. நம்மைச்சுற்றி...

- ஒளி, காற்று, நீர், மண் ஆகியவற்றை உற்றுநோக்குதல் மற்றும் அவற்றின் பயன்பாட்டைப் புரிந்துகொள்ளுதல்.
- நீர் ஆதாரங்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்
- விலங்குகளின் பன்முகத்தன்மையை அறிதல் மற்றும் அவற்றின் பண்புகள், வாழிடங்கள், இயக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்துதல்.

பாடநூலின் சிறப்புக்கூறுகள்

அன்றாட வாழ்க்கைத் தொடர்பு

- சூழல் சார்ந்த கற்றல்
- கற்றலை அன்றாட வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்தல்.
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக விழிப்புணர்வு.

21ஆம் நூற்றாண்டுத் திறன்கள்

- கூர்சிந்தனை, படைப்பாற்றல், இணைந்து செயல்படுதல், தகவல் தொடர்பு, சிக்கல் தீர்த்தல் போன்ற திறன்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

முழுமையான வளர்ச்சி

- விழுமியங்கள், வாழ்க்கைத் திறன்கள், சமூகத் திறன்கள் மற்றும் மனவெழுச்சி மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல்.
- செயல்பாடுகள் மூலம் நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்த்தல்.

கற்றலுக்குத் துணைபுரிபவை

- எளிய மற்றும் வயதிற்கு ஏற்ற மொழிநடைப் பயன்பாடு.
- பாடநூலோடு ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நூல்.
- ஆசிரியர் கையேடு
- எண்ம மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள்

மதிப்பீடு மற்றும் கற்றல் முன்னேற்றத்திற்குத் துணைபுரிபவை



கற்றல் பயணம்
எளிய உற்றுநோக்கல் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான வினாக்கள் மூலம் குழந்தைகளின் புரிதலை மதிப்பீடு செய்து, கற்றல் முன்னேற்றத்தையும் கூடுதல் கவனம் தேவைப்படும் பகுதிகளையும் கண்டறிய உதவுகிறது.



நான் கற்றவை
குழந்தைகள் கற்ற முக்கியக் கருத்துகளை நினைவுகூரவும் சிந்திக்கவும் உதவுகிறது. மேலும், கற்றலை மீளாய்வு செய்யவும் வலுவூட்டவும் துணைபுரிகிறது.



நானே செய்வேன்
எளிய வாய்மொழி, எழுத்துச் செயல்பாடுகள், செயல்திட்டங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகள் வாயிலாகக் கற்பதைப் பயன்படுத்தும் வாய்ப்புகளை வழங்கி, தன்னம்பிக்கை மற்றும் சுயகற்றலை மேம்படுத்துகிறது.

இப்பாடநூலானது, அன்றாட வாழ்க்கையுடன் அறிவியலைத் தொடர்புபடுத்தி, மகிழ்வுடன் பொருளுணர்ந்து கற்பதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், குழந்தைகளின் விழுமியங்களையும் திறன்களையும் வளர்க்க வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவுகிறது. இது, குழந்தைகளை ஆர்வமுள்ள கற்போராகவும் பொறுப்புள்ள சமூக உறுப்பினராகவும் வளர்த்தெடுக்க உறுதுணை புரிகிறது.

பொருளடக்கம்

அலகு - 1 நம்மைப்பற்றி...



என் குடும்பமும் நண்பர்களும் 80

புலன்கள், பாதுகாப்பு 88

அலகு -2 நம்மைச்சுற்றி...



வியத்தகு இயற்கை 103

நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள் 117

மின்னூல்

உள்ளடங்கிய மின்னூல்

ஆசிரியர் கையேடு

1 நம்மைப்பற்றி...

என் குடும்பமும் நண்பர்களும்



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

மீனாவின் குடும்பம்

என் அப்பா அதிகாலையில் மீன் பிடிக்கச் செல்வார்.



என் அம்மா மீன் விற்பனை செய்வார்.



கடற்கரை மணலில் விளையாட எனக்குப் பிடிக்கும்.



நாங்கள் ஒன்றாக அமர்ந்து இரவு உணவைச் சாப்பிடுவோம்.

வரைக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

என் அம்மா சிறிய கடை வைத்திருக்கிறார்.



அவர் மொத்த விற்பனைச் சந்தையிலிருந்து பொருள்களை வாங்குவார்.







அப்பொருள்களைக் கடையில் வரிசையாக அடுக்கி வைத்து விற்பனை செய்வார்.



கடையில் என் அம்மாவுடன் இருக்க எனக்குப் பிடிக்கும். என் அம்மாவை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாட வாழ்க்கை முறை வெவ்வேறாக இருக்கும்.

உங்களின் குடும்பத்தில் அன்றாடம் நிகழும் செயல்கள் யாவை? பகிர்க.

வரைக.



வயதில் மூத்தோருக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? பகிர்க.

செய்து கற்போம்

1. கவி தன்னுடைய தாத்தாவுக்கும் பாட்டிக்கும் என்ன கொடுத்து உதவுவாள்? வரைந்து எழுதுக.


குடை


நாற்காலி


காய்கறிகள்


தண்ணீர்









2. வடிவமைப்பை நிறைவு செய்க.



செயல்பாட்டு நேரம்

வகுப்பிலுள்ள சக மாணவர்கள் குறித்து உங்களுக்குத் தெரியுமா?

1. நான் நினைவுகூர்வேன்!



2. நண்பருடன் பகிர்வேன்.



ஆசிரியர் கையேடு

- குழந்தைகள் அனைவரும் தங்களது பெயர்களைக் கூறும்வரை விளையாட்டைத் தொடரவும்.
- குழந்தைகள், இருவர் இருவராக இணைந்து தங்களுக்குப் பிடித்த விளையாட்டு, உணவு மற்றும் வண்ணங்கள் குறித்துப் பேசவும். பின்னர், வகுப்பில் அவற்றைப் பகிர்ந்து கொள்ளச் செய்யவும்.

பள்ளியில் நாங்கள்...



இணைந்து கற்கிறோம்.



ஒருவருக்கொருவர் உதவுகிறோம்.



பொருள்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.



இணைந்து சாப்பிடுகிறோம்.



இணைந்து விளையாடுகிறோம்.

செய்து கற்போம்

1. இணைந்து விளையாடுக.



ஒரு A4 தாளில் 4x4 கட்டங்களை வரையவும்.



16 அட்டைகளைத் தயாரிக்கவும்.



8 வெவ்வேறு படங்களை வரையவும். ஒரே படத்தை 2 அட்டைகளில் வரையவும்.



வரைந்த 16 பட அட்டைகளையும் கவிழ்த்து வைக்கவும்.



எவையேனும் 2 பட அட்டைகளைத் திருப்பவும். ஒரே படங்களாக இருப்பின் எடுத்து வைத்துக் கொள்ளவும்.



அவை வெவ்வேறு படங்களாக இருப்பின் அதே இடத்தில் கவிழ்த்து வைக்கவும்.

அனைத்துப் பட அட்டைகளையும் பொருத்தி எடுக்கும்வரை விளையாட்டைத் தொடரவும்.

2. உங்களின் நண்பர்களிடம் அவர்களுக்குப் பிடித்த பழம், காய்கறி, வண்ணம், விளையாட்டு, குறித்துக் கேட்டறிந்து எழுதுக.

நண்பனின் பெயர்	பழம்	காய்கறி	வண்ணம்	விளையாட்டு

3. காகிதப்பூ செய்து, உங்கள் நண்பருக்குத் தருக.









மேற்கண்ட செயல்களைச் செய்வதற்குக் குழந்தைகளுக்கு உதவவும்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

கீழ்க்காணும் நிகழ்வுகளின் போது நிலனின் உணர்வு என்னவாக இருக்கும்? வரைக.

மகிழ்ச்சி கவலை பயம் கோபம்

















செய்து கற்போம்

1. யார் எங்கே அமர்ந்துள்ளனர்?



அ) பிரியாவின் இடதுபக்கத்தில் அமர்ந்திருப்பவர் யார்? வினய்.

ஆ) இரண்டாவது வரிசையின் நடுவில் அமர்ந்திருப்பவர் யார்? _____.

இ) மீனாவிற்கு நேர்ப்பின்புறத்தில் அமர்ந்திருப்பவர் யார்? _____.

ஈ) தாராவின் இரு பக்கங்களிலும் யாரெல்லாம் அமர்ந்திருக்கிறார்கள்?
_____ மற்றும் _____.

உ) நான் இரண்டாவது வரிசையில் அமர்ந்துள்ளேன். என் பெயரின் முதல் எழுத்து "ப". நான் யார்? _____.

ஊ) மேரியின் வலதுபக்கத்தில் அமர்ந்திருப்பவர் யார்? _____.

2. உங்கள் வகுப்பறையை அலங்கரிக்க.





ஆசிரியர் கையேடு

மேற்கண்ட செயல்களைச் செய்வதற்குக் குழந்தைகளுக்கு உதவவும்.



கற்றல் பயணம்

1. படத்தைப் பாருங்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்?



☐ நான் பார்த்துக்கொண்டு இருப்பேன்.

☐ நான் அங்கிருந்து சென்று விடுவேன்.

☐ நான் பாட்டிக்கு உதவுவேன்.

2. என் நண்பரின் பெயர் _____.



அவனுக்குப் / அவளுக்குப் பிடித்த

உணவு _____

விளையாட்டு _____

வண்ணம் _____

பழம் _____

3. நண்பர்கள் பொருள்களை உங்களிடம் பகிரும்போது எவ்வாறு உணர்வீர்கள் என்பதை (✓) குறியிட்டுக் காட்டுக.



☐ ☐ ☐ ☐



நான் கற்றவை

1. என் குடும்பத்தில் நிகழும் அன்றாட வாழ்க்கை வழக்கங்களைக் குறித்து என்னால் கூற முடியும். ☆

2. உதவி தேவைப்படும் மூத்தோருக்கு என்னால் உதவ முடியும். ☆

3. சக மாணவர்களுடன் நல்ல உறவுமுறையில் இருக்க முடியும். ☆

4. நண்பர்களுக்குப் பகிரவும், உதவவும் முடியும். ☆

புலன்கள், பாதுகாப்பு

புலன்கள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நமது புலன்கள் யாவை?
அவை நமக்கு எவ்வாறு உதவுகின்றன?



நம் ஐம்புலன்கள் நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப் பார்க்க, கேட்க, முகர, சுவைக்க, தொட்டுணர உதவுகின்றன.

செய்து கற்போம்

1. உங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் எது?



- படத்தில் காட்டியுள்ளவாறு, ஒரு வண்ணத்தின்மீது மற்றொரு வண்ணத்தைத் தீட்டுக.
- கிடைக்கும் வண்ணத்தை எழுதுக.



நம்மைச் சுற்றியுள்ள பொருள்களின் வண்ணங்களையும் வடிவங்களையும் பார்க்க நம் கண்கள் உதவுகின்றன.

வானம் எப்பொழுதும் நீல நிறமாகத் தெரியுமா?

2. மாலை நேர வானத்தை வரைந்து, வண்ணமிடுக.



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

அறுசுவை...













உணவினைச் சுவைக்க நம் நாக்கு உதவுகிறது.

ஆசிரியர் கையேடு

பல்வேறு உணவுப் பொருள்களையும் அவற்றின் சுவைகளையும் குறித்துக் கலந்துரையாடக் குழந்தைகளை ஊக்கப்படுத்தவும்.

செய்து கற்போம்



1. நான் யார்? படம் வரைந்து என் பெயரை எழுதுக.

(பாகற்காய், மிளகாய், எலுமிச்சை, வாழைப்பழம்)

நான் நீளமாக, பச்சை நிறத்தில் கார்ப்புச் சுவையுடன் இருப்பேன்.

_____

நான் நீளமாக, மஞ்சள் நிறத்தில் இனிப்புச் சுவையுடன் இருப்பேன்.

_____

நான் மஞ்சள் நிறத்தில் சிறியதாக, புளிப்புச்சுவையுடன் இருப்பேன்.

_____

நான் பச்சை நிறத்தில் நீளமாகக் கசப்புச்சுவையுடன் இருப்பேன். என் தோல் சொரசொரப்பானது.

_____

2. பொருள்களைத் தொட்டுணர்ந்து எழுதுக.

(மென்மையானது, கடினமானது, குளிர்ச்சியானது, ஈரமானது, உலர்ந்தது, வழவழப்பானது)





வெண்ணெய் வழவழப்பானது.



இந்த இலை _____.



கல் _____.



பஞ்சு _____.



பனிக்கட்டி _____.



நனைந்த துணி _____.

பொருள்களின் தன்மையைத் தொட்டுணர நம் தோல் உதவுகிறது.



குழந்தைகளிடம் தங்களைச் சுற்றியுள்ள பல்வேறு பொருள்களைத் தொட்டுணரச் சொல்லவும். மேற்கண்ட பொருள்களின் தன்மைகளுடன் சூடானது, கனமானது, இலேசானது, பிசுபிசுப்பானது மற்றும் துகள் போன்றது ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தவும்.

செயல்பாட்டு நேரம்



1. பின்வரும் செயல்களைச் செய்து, கேட்கும் ஒலியை "உரத்த ஒலி" அல்லது "மென்மையான ஒலி" என எழுதுக.

மின்விசிறியை இயக்கு



மென்மையான ஒலி

மணியை ஒலிக்கச் செய்



_____

கால்களைத் தட்டு



_____

நாற்காலியை நகர்த்து



_____



கதவைத் திற

_____

நீங்கள் காலைப்பொழுதில் கேட்கும் ஒலிகள் யாவை?



கரும்பலகையில் எழுது



_____

கைகளைத் தட்டு



_____

உரத்த, மென்மையான ஒலிகளைக் கேட்க நம் காதுகள் உதவுகின்றன.

2. **நண்பர்களுடன் விளையாடுக.**

- நண்பரின் கண்களைக் கட்டவும்.
- பிற நண்பர்களை ஒவ்வொருவராக விலங்குகளைப்போல ஒலி எழுப்பச் செய்யவும்.
- கண்களைக்கட்டிய நண்பர் ஒலிக்குரிய விலங்கின் பெயரையும், அது எப்பக்கத்தில் இருந்து வருகிறது என்பதையும் கூறவேண்டும்.
- இவ்வாறு விளையாட்டைத் தொடரவும்.



ஆசிரியர் கையேடு

மேற்கண்ட செயல்பாட்டைச் செய்வதற்கு, குழந்தைகளுக்கு வழிகாட்டவும்.

செய்து கற்போம்



1. விரும்பத்தக்க மணத்திற்கு 🟢 வண்ணமும்,
   விரும்பத்தகாத மணத்திற்கு 🔴 வண்ணமும் தீட்டுக.







விரும்பத்தக்க, விரும்பத்தகாத மணத்தை முகர நம் மூக்கு உதவுகிறது.

2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி அட்டவணையை நிரப்புக.

நிறம் – பச்சை, மஞ்சள், வெள்ளை, இளஞ்சிவப்பு, அடர்சிவப்பு

தன்மை – மென்மையானது, கடினமானது, வழவழப்பானது, சொரசொரப்பானது, துகள் போன்றது

மணம் – விரும்பத்தக்கது, விரும்பத்தகாதது

ஒலி – உரத்த, மென்மையான

சுவை – புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு

பொருள்கள்	நிறம்	தன்மை	மணம்	ஒலி	சுவை
எலுமிச்சை	மஞ்சள்	மென்மையானது	விரும்பத்தக்கது	x	புளிப்பு
சர்க்கரை					
கிளி					
உப்பு					
மணி					
பருத்திப் பஞ்சு					
ரோஜா					
வாழைப்பூ					

பாதுகாப்பு

வீட்டில் பாதுகாப்பு

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

வீட்டில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள் யாவை?

கவினும் கனியும் அம்மாவுடன் வீட்டில் இருக்கிறார்கள்.











ஆசிரியர் கையேடு

வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிகள் குறித்துக் கலந்துரையாடவும்.

பள்ளியில் பாதுகாப்பு

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

பள்ளியில் நானும் என் நண்பர்களும் எவ்வாறு பாதுகாப்பாக இருப்போம்?



"நான் விதிமுறைகளைப் பின்பற்றுவேன். ஏனெனில் _____."

ஆசிரியர் கையேடு

பள்ளியில் பாதுகாப்பு விதிமுறைகளை ஏன் பின்பற்ற வேண்டும் என்பது குறித்துக் கலந்துரையாடவும்.

செய்து கற்போம்

1. பாதுகாப்பான செயல்களுக்குப் **பச்சை** வண்ணத்தையும் பாதுகாப்பற்ற செயல்களுக்குச் **சிவப்பு** வண்ணத்தையும் பயன்படுத்திப் புள்ளிகளை இணைக்கவும்.



2. இது போன்ற சூழ்நிலையை எதிர்கொண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? (✓) குறியிடுக.



- அமைதியாக இருப்பேன் ☐
- "தயவுசெய்து நிறுத்துங்கள்" என்று கூறுவேன் ☐
- விலகிச் செல்வேன் ☐
- நானும் கிள்ளுவேன் ☐
- ஆசிரியரிடம் கூறுவேன் ☐
- உதவி கேட்பேன் ☐

ஆசிரியர் கையேடு

இதுபோன்ற பாதுகாப்பற்ற சூழ்நிலைகளைக்கூறி, குழந்தைகள் செய்ய வேண்டியது குறித்தும் உடன் இருக்கும் மற்ற குழந்தைகள் செய்ய வேண்டியது குறித்தும் கலந்துரையாடச் சொல்லவும்.

நீர்நிலைகளில் பாதுகாப்பு

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

திருவிழாவிற்குச் செல்லும் வழியில்...



ஆசிரியர் கையேடு

நீர்நிலைகளுக்கு அருகில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை வலியுறுத்தவும்.

செய்து கற்போம்

1. தெரிவுசெய்து எழுதுக.

- மின்கம்பத்தைச்சுற்றித் தண்ணீர் தேங்கி இருந்தால் கவனமாக இருக்கவும்.
- பெரியவர் உதவியுடன் நீந்த வேண்டும்.
- படிகள் வழுக்கலாம்! கவனமாக நடக்கவும்.
- தண்ணீர் உள்ள இடம் ஆழமாக இருக்கலாம். உள்ளே இறங்காதே!









2. சிந்தித்து உருவாக்குக – பட்டாசுகளைக் கையாள்வது குறித்த ஒரு பாதுகாப்புச் சுவரொட்டியை உருவாக்குக.



சமுதாயத்தில் பாதுகாப்பு

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

திருவிழாவில்...







நீங்கள் காணாமல் போனால் என்ன செய்வீர்கள்?

1



பயப்படாதே, உனக்கு உதவி செய்பவர்கள் இருக்கிறார்கள்; அவர்களிடம் உதவி கேட்கவும்.

2



காவலர் இருக்கும் இடம் அறிய அருகில் இருப்பவரிடம் உதவி கேட்கவும்.

3



உங்கள் பெற்றோரின் அலைபேசி எண்ணை அவரிடம் கூறவும்.

அல்லது

4



உங்களுக்கு அருகில் உள்ள பெரியவர்களிடம் 1098 அல்லது 14417 என்ற எண்ணைத் தொடர்புகொள்ளச் சொல்லவும்.

ஆசிரியர் கையேடு

இந்தச் சூழ்நிலைகள் குறித்துக் குழந்தைகளுடன் கலந்துரையாடி, நடித்துக் காட்டச் சொல்லவும்.

செயல்பாட்டு நேரம்

ஆசிரியர் கையேடு

குழந்தைகளிடம் வெவ்வேறு செயல்களைக் கூறி, அவை பாதுகாப்பானவையா, பாதுகாப்பற்றவையா எனச் சிந்தித்து அவற்றிற்கு ஏற்றாற்போல் குதிக்கச் செய்யவும்.



செய்து கற்போம்

பள்ளி முடிந்த பிறகு உங்களை அழைத்துச் செல்ல ஒருவரும் வரவில்லை. யாரிடம் உதவி கேட்பீர்கள்? புதிர்ப் பாதையில் கண்டுபிடிக்க.





கற்றல் பயணம்

1. வேறுபட்ட ஒன்றை வட்டமிடுக.






2. செயலுடன் உரிய புலனைக் கோடிட்டு இணைக்க.





முகர்தல்

கேட்டல்

தொடுதல்

3. உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்களை வட்டமிடுக.










4. மீனா காணாமல் போய்விட்டாள். அவள் என்ன செய்ய வேண்டும்?

- ◯ காவலரிடம் சொல்ல வேண்டும்.
- ◯ பெற்றோரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.
- ◯ 1098/14417 என்ற எண்ணைத் தொடர்புகொள்ள வேண்டும்.
- ◯ தெரியாத நபர்களுடன் செல்ல வேண்டும்.



நான் கற்றவை

- புலன்களைப் பயன்படுத்திச் சுற்றியுள்ள பொருள்களை என்னால் விவரிக்க முடியும்.
- வீடு, பள்ளி மற்றும் சமுதாயத்தில் என்னால் பாதுகாப்பாக இருக்க முடியும்.

நானே செய்வேன்

1. கொடுக்கப்பட்ட படங்களைப் பார்த்துப் பாதுகாப்பான செயல்களுக்குப் பச்சை வண்ணமும் பாதுகாப்பற்ற செயல்களுக்குச் சிவப்பு வண்ணமும் தீட்டுக.







2. பாதுகாப்பான செயலைத் தெரிவு செய்து எழுதுக.

அ) நான், குளம் அல்லது ஆற்றின் அருகில் நிற்கும்போது _____.

(நீரில் விளையாடுவேன் / தண்ணீரைவிட்டு விலகி இருப்பேன்)

ஆ) நான், வகுப்பறையில் _____.

(மேசையின்மேல் ஏறி விளையாடுவேன்/
மேசையை எழுதப் பயன்படுத்துவேன்)

3. செயலுக்கு ஏற்ற புலனுணர்வுகளை எடுத்து எழுதுக.

(முகர்தல், கேட்டல், சுவைத்தல், தொடுதல்)






_____ _____ _____ _____

4. செயலைப் பொருத்தமான குறியீட்டுடன் கோடிட்டு இணைக்கவும்.











5. வாய்மொழி வினாக்கள்

அ) உங்கள் குடும்பத்தில் அன்றாடம் நிகழும் செயல்களைப் பகரவும்.

ஆ) தேங்கிய நீர் இருந்தால், அவ்விடத்தில் பாதுகாப்பாக இருக்க நீங்கள் என்ன செய்வீர்கள்?

6. செயல்திட்டம்

வீட்டிலிருந்து இரண்டு உணவுப் பொருள்களை எடுத்து வரவும்.

அ) அவை யாவை?

ஆ) அவற்றைப் பற்றி விளக்குக.



2 நம்மைச்சுற்றி...

வியத்தகு இயற்கை

ஒளியும் நிழலும்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நிழல் என்றால் என்ன? அது எவ்வாறு மாறுகிறது?



சூரிய ஒளியில் நிற்கவும்.
உங்கள் உருவம் தரையில்
கருமையாகத் தெரிகிறதா?
அதுதான் உங்கள் நிழல்.

ஒளியால் நிழல் உருவாகிறது.

செயல்பாட்டு நேரம்

நிழலைப்போலச் செய்தல் – விளையாட்டு.

அருண்

சலீம்







அருணும் சலீமும் சூரிய ஒளியில் விளையாடுகிறார்கள்.

அருண், படத்தில் காட்டியுள்ளவாறு செயல்களைச் செய்கிறான்.

சலீம், அருணைப் பார்க்காமல், அவனது நிழலைக் கவனித்து அதைப்போலவே செய்கிறான்.

இந்த விளையாட்டை உங்கள் நண்பருடன் விளையாடுங்கள்.



செய்து கற்போம்

1. விலங்குகளுக்குப் பொருத்தமான நிழலை வட்டமிடுக.



2. உற்றுநோக்கி வரைக.

காலை 10.00 மணி	பிற்பகல் 1.00 மணி	மாலை 3.00 மணி
கொடிக்கம்பம்		

ஒரு நாளில் மிகச்சிறிய நிழலை எப்போது காண்பாய்? _____

ஆசிரியர் கையேடு

குழந்தைகளைப் பள்ளியில் உள்ள கொடிக்கம்பத்தை உற்றுநோக்கி அதன் நிழலை வரையச் சொல்லவும்.





உங்களுக்குத் தெரியுமா?

கடிகாரங்கள் உருவாக்கப்படுவதற்குமுன் சூரிய மணிகாட்டியில் உருவாகும் நிழலைப் பயன்படுத்தி மக்கள் நேரத்தை அறிந்தனர்.

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

மனிதர்களும் விலங்குகளும் மரத்தின்கீழ் இருக்க விரும்புவது ஏன்?



மரம் நமக்கு நிழலைத் தருகிறது.

செய்து கற்போம்

1. படத்தைப் பார்த்துச் செயலை எழுதுக.

பேசுதல், விளையாடுதல், விற்பனை செய்தல், தூங்குதல்

நபர்கள்	செயல்
குழந்தைகள்	
முதியவர்	
பெண்கள்	
வியாபாரி	

2. படத்தில் உள்ள விலங்குகளின் பெயர்களை எழுதுக.

_____ _____ _____ _____

_____ _____ _____

3. ஒப்பிட்டுப் பகர்க.



முதலில் சூரிய ஒளியிலும் பின்னர், மரத்தின் அடியிலும் நிற்கவும். எவ்வாறு உணர்கிறீர்கள்?

காற்று

செய்து பார்ப்போம்

ஒலி எவ்வாறு உங்களை வந்தடைகிறது?

1. உங்கள் நண்பரை வகுப்பறையின் ஒரு மூலையில் நின்று கைகளைத் தட்டச் சொல்லவும். உங்களால் அந்த ஒலியைக் கேட்க முடிகிறதா?



காற்று பொருள்களை நகர்த்தும்.
காற்று ஒலியைக் கடத்தும்.
காற்று மணத்தைப் பரப்பும்.

நம்மைச்சுற்றி காற்று இல்லாவிட்டால் என்ன நிகழும்?



2. ஒலியைக் கவனிக்க.

- இரண்டு வெவ்வேறு நீளமுள்ள உறிஞ்சுகுழல்களை எடுத்துக் கொள்ளவும் (நீளம் மற்றும் குட்டை).
- ஓர் உறிஞ்சுகுழலை எடுத்து, காற்றை ஊதி ஒலி எழுப்பவும்.
- இதேபோல் மற்றோர் உறிஞ்சுகுழலை ஊதி ஒலி எழுப்பவும்.
- ஒவ்வொரு உறிஞ்சுகுழலில் இருந்தும் எழும் ஒலியைக் கவனிக்கவும்.



உறிஞ்சுகுழல்	உரத்த ஒலி (✓/×)	மென்மையான ஒலி (✓/×)
நீளமானது		
குட்டையானது		

செய்து கற்போம்

1. எவையெல்லாம் ஒலி எழுப்பும்? வட்டமிடுக.


ஒலிப்பான்


மழை


கம்பளி நூல்


இடி


நகரும் வாகனம்


புல்


காகம்


நாய்


துணி

உங்களுக்குப் பிடித்த ஒலி எது? _____

2. காகிதத்தில் விந்தை.


1 2 3



4 5


ஊது

3. மணம் எவ்வாறு நம்மை வந்தடைகிறது?

நறுமணமிக்க மூன்று பொருள்களை வரைக.

சமையலறையிலிருந்து உணவின் மணம் உங்களிடம் எவ்வாறு வந்தடைகிறது?



காற்றின் வகைகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நகரும் காற்று எவ்வளவு வலிமையானது?

தென்றல்



பலத்த காற்று



சூறாவளி



புயல்



நகரும் காற்று மிதமாகவோ, வலிமையாகவோ இருக்கலாம்.

சிந்தித்து எழுதுக.

(பலத்த காற்று, சூறாவளி, தென்றல், புயல்)









நீர்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

நம் வீட்டிற்கு நீர் எங்கிருந்து வருகிறது?



மழைநீர், நிலத்திற்கு அடியில் செல்கிறது. இந்த நிலத்தடி நீரை நம் பயன்பாட்டிற்காக, கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணறு வழியாகப் பெறுகிறோம்.

நீர், நம் வீட்டை வந்தடைவதற்குமுன் நீண்ட தொலைவைக் கடந்து வருகிறது.

ஆசிரியர் கையேடு

பல்வேறு நீர் ஆதாரங்கள் குறித்துக் குழந்தைகளுக்கு விளக்கவும்.

செய்து கற்போம்

1. நாம் பயன்படுத்தும் நீர், நமக்கு எங்கிருந்து வருகிறது? எழுதுக.























ஆறு

மழை

ஏரி

அணை

நிலத்தடி நீர்

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

நீர்த்தொட்டி

கிணறு

தண்ணீர் லாரி

ஆழ்துளைக்கிணறு மற்றும் அடி குழாய்

குழாய்

2. உங்கள் வீட்டிற்கு நீர் எங்கிருந்து வருகிறது என்பதை (✓) குறியிட்டுக் காட்டுக.









3. பாதுகாப்பான குடிநீரை எவ்வாறு பெறலாம்?



ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்தல் | வடிகட்டுதல் | கொதிக்க வைத்தல் | மூடி போட்டு மூடுதல் | குளிர வைத்தல்

இச்செயல்முறையை உங்கள் வீட்டில் பின்பற்றவும்.
கொதிக்க வைத்த நீர், நம்மை நோயிலிருந்து பாதுகாக்கும்.

செய்து பார்ப்போம்

1. புட்டியை நிரப்ப எத்தனை குவளை நீர் தேவைப்படும்? ஊகிக்கவும்.

- குவளையை நீரினால் நிரப்பவும்.
- அதனைப் புட்டியில் ஊற்றவும்.
- நீரின் அளவைக் குறிக்கவும்.
- புட்டி நிரம்பும்வரை தொடர்ந்து ஊற்றவும்.
- எத்தனை குவளை நீர் ஊற்றப்பட்டது என்பதைக் கணக்கிடவும்.
- உங்கள் பதிலை எழுதவும்.



ஊகித்தது	கணக்கிட்டது

2. செயல்திட்டம்: நீர்ப்பயன்பாடு.

நான் ஒரு நாளில் எவ்வளவு நீரைப் பயன்படுத்துகிறேன்?

எத்தனை  நீர் தேவைப்படுகிறது?

குளித்தல் : ____

பல் துலக்குதல் : ____

கழிப்பறையைப் பயன்படுத்துதல் : ____

கை கழுவுதல் : ____

எத்தனை  நீர் தேவைப்படுகிறது?

பருகுதல் : ____



ஒரு விடுமுறை நாளில் இதைப் பதிவு செய்ய ஊக்கப்படுத்தவும்.

3. நீரில் இசை.



- இரண்டு கண்ணாடிக் குவளைகளை மேசை மீது வைக்கவும்.
- அவற்றுள் படத்தில் காட்டியுள்ளவாறு நீரை நிரப்பவும்.
- பென்சிலால் குவளைகளை இலேசாகத் தட்டவும்.
- ஒலிகளைக் கவனிக்கவும்.
- ஒலிகளில் வேறுபாடு தெரிகிறதா?

குவளை	உரத்த ஒலி (✓/×)	மென்மையான ஒலி (✓/×)
குறைந்த அளவு நீர்		
அதிக அளவு நீர்		





உங்களுக்குத் தெரியுமா?
நீர்க்கிண்ண இசைக்கருவி என்பது நீர் நிரப்பப்பட்ட கிண்ணங்களைப் பயன்படுத்தி இசையை உருவாக்கும் ஓர் இசைக்கருவி.

4. நீர் உறிஞ்சும் பொருள்கள் எவை?



ஒவ்வொரு பொருளின் மீதும் சிறிதளவு நீரை ஊற்றவும். உற்றுநோக்கி எழுதவும்.



வ. எண்	உறிஞ்சும்	உறிஞ்சாது
1.		
2.		
3.		
4.		
மொத்தம்		



- இவை அனைத்தும் உற்றுநோக்கும் பயிற்சிகள் மட்டுமே.
- பரிசோதனைகளைச் செய்துகாட்டிக் குழந்தைகளை உற்றுநோக்கச் செய்யவும்.

5. காகித மீன் செய்வோம்.



மண்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

மண்ணால் செய்யப்படும் பொருள்கள் யாவை?



செங்கற்கள்



ஓடுகள்



பானைகள்



பொம்மைகள்

நாம், மண்ணைப் பயன்படுத்திச் செங்கற்கள், ஓடுகள், பானைகள், பொம்மைகள் போன்ற பல பொருள்களைச் செய்கிறோம்.

மேலும், மண் மழைநீரைத் தேக்கி வைக்கிறது.



மண் மழைநீரைத் தேக்கி வைக்கவில்லை என்றால் என்ன நிகழும்?



செய்து கற்போம்

சுவரை முழுமையாக வரைந்து வண்ணமிடுக.





செங்கற்கள் எவ்வாறு அடுக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனித்தீர்களா?



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

படத்தில் நாம் என்ன காண்கிறோம்?



மேற்கண்ட படத்தில் காற்று, நீர் மற்றும் மண்ணை அசுத்தப்படுத்தும் பொருள்களை வட்டமிடுக.

நீங்கள் காற்று, நீர், மண் ஆகியவற்றை எவ்வாறு தூய்மையாக வைத்திருப்பீர்கள்?

குப்பைகளை எரிக்க மாட்டோம் – காற்றைத் தூய்மையாக வைத்திருப்போம்.

கழிவுகளை நீரில் போட மாட்டோம் – நீரைத் தூய்மையாக வைத்திருப்போம்.

குப்பைத்தொட்டியைப் பயன்படுத்துவோம் – நிலத்தைத் தூய்மையாக வைத்திருப்போம்.





கற்றல் பயணம்

1. சரியான நிழலை வட்டமிடுக.



2. படத்தைப் பார்த்துக் காற்றின் வகையை எழுதுக.

(சூறாவளி, தென்றல்)





----

3. மழை → குழாய் → ஆறு → மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என மேரி கூறுகிறாள். இதைச் சரியான வரிசையில் எழுதுக.

_____

4. உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள நீர் ஆதாரம் ஒன்றை வரைக.

(நீர்த்தொட்டி/குழாய்/கிணறு/தண்ணீர் லாரி/ஆழ்துளைக்கிணறு/அடி குழாய்)



நான் கற்றவை

- ஒளியினால் நிழல் உருவாகிறது என்பதை அறிந்து கொண்டேன்.
- பல்வேறு நேரங்களில் நிழலில் ஏற்படும் மாற்றங்களை என்னால் பதிவிட முடியும்.
- காற்றின் வெவ்வேறு வகைகளைப் பெயரிடுவேன்.
- நம் வீடுகளுக்கான நீர் ஆதாரங்களின் பெயர்களை என்னால் கூற முடியும்.
- காற்று, நீர், மண் ஆகியவற்றைத் தூய்மையாக வைத்திருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவேன்.

நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

விலங்குகளைக் கண்டுபிடித்து, வண்ணமிட்டு அவற்றின் பெயர்களைக் கூறுக. அவை எங்கெங்கு வாழ்கின்றன?



நம்மைச்சுற்றிப் பல்வேறு வகையான விலங்குகள் காணப்படுகின்றன.

விலங்குகள் ஒன்றிலிருந்து மற்றொன்று எவ்வாறு வேறுபடுகின்றன?



உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

குளத்திலும் குளத்தைச் சுற்றிலும் என்னென்ன விலங்குகளை உங்களால் பார்க்க முடிகிறது?



ஆசிரியர் கையேடு

குளத்தில் காணப்படும் விலங்குகள் குறித்துக் குழந்தைகள் பேச ஊக்கமூட்டவும்.

நீர்வாழ் விலங்குகள் – மீன்

கடல், ஆறு மற்றும் குளங்களில் பல வகையான மீன்கள் காணப்படுகின்றன. மீன்கள் நீந்துவதற்குப் பக்கவாட்டுத் துடுப்புகளும் வால் துடுப்பும் உதவுகின்றன. மீன்கள் நீந்தும்போது திசையைத் திருப்ப வால் துடுப்பு உதவுகிறது.

செய்து கற்போம்

1. மீனின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்க.



2. ஒரே மாதிரியான மீன்களை இணைக்க.



நீர் மற்றும் நிலவாழ் விலங்குகள்

வாத்து மற்றும் தவளை நீர், நிலம் ஆகிய இரண்டிலும் வாழ்கின்றன.

தவளை



விரலிடைச்சவ்வு



வாத்து

- இவை நீரில் நீந்துவதற்கு ஏதுவாக விரலிடைச்சவ்வைப் பெற்றுள்ளன.
- தவளைகள் நிலத்தில் குதித்தும் தாவியும் செல்கின்றன.

3. தாளைப் பயன்படுத்தித் தவளையை உருவாக்குக.



சிறிய விலங்குகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

உங்களைச்சுற்றிக் காணப்படும் சிறிய விலங்குகள் யாவை?

பாலுவின் குடும்பத்தினர், சிறிய விலங்குகளைப் பார்க்கிறார்கள்.



நம்மைச்சுற்றித் தேனீ, வண்ணத்துப்பூச்சி, சிலந்தி, எறும்பு, புள்ளி வண்டு, பூரான், மண்புழு, வெட்டுக்கிளி, தும்பி, ஈ, வண்டு போன்ற பல வகையான சிறிய விலங்குகள் காணப்படுகின்றன.

ஆசிரியர் கையேடு

தங்கள் பகுதியில் காணப்படும் விலங்குகள் குறித்தும் அவை எவ்வாறு இயங்குகின்றன என்பது குறித்தும் உரையாட வழிகாட்டவும்.

சிறிய விலங்குகளின் இயக்கங்கள்

கால்கள் அற்றவை – ஊர்ந்தும் நகர்ந்தும் செல்பவை

மண்புழு





நத்தை

கால்கள் மட்டும் உடையவை – நடக்கக் கூடியவை



தேள்

பூரான்



இறக்கைகளும் கால்களும் உடையவை – நடக்கவும் பறக்கவும் செய்பவை.



ஈ



புள்ளி வண்டு



கரப்பான் பூச்சி



வெட்டுக்கிளி

அட்டவணைப்படுத்துக.

ஊர்ந்தும் நகர்ந்தும் செல்பவை	நடக்க மட்டும் செய்பவை	பறக்க, நடக்கக் கூடியவை
_____	_____	_____
_____	_____	_____

இவை வண்ணமயமான சில சிறிய விலங்குகள்.



வெட்டுக்கிளி



தும்பி



வண்ணத்துப்பூச்சி



செய்து கற்போம்

1. வண்ணமிடுக.









நத்தை தனது வீட்டைத் தன் முதுகில் சுமந்து செல்கிறது.



2. விலங்குகளின் பெயர்களை எழுதுக.

















பறவைகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

உங்களைச்சுற்றிக் காணப்படும் பறவைகள் யாவை?




ஆந்தை


தூக்கணாங்குருவி


மைனா


புறா


தேன்சிட்டு


காகம்


கோழி


தையல் பறவை


மயில்


சேவல்


சிட்டுக்குருவி


கிளி


மரங்கொத்தி



தங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளைக் குறித்துக் கலந்துரையாடச் சொல்லவும்.

புறாவின் பாகங்கள்.



செய்து கற்போம்

1. உற்றுநோக்கிய பறவைகளை, உருவ அளவின் அடிப்படையில் வகைப்படுத்துக.

சிறியவை	நடுத்தரமானவை	பெரியவை

2. நான் யார்?

(ஆந்தை, கிளி, காகம், சேவல், மரங்கொத்தி)

1. நான் கறுப்பு நிறத்தில் இருப்பேன். "கா... கா..." என ஒலி எழுப்புவேன். _____.
2. நான் பச்சை நிறத்தில் இருப்பேன். என் அலகு சிவப்பாக இருக்கும். _____.
3. நான் மரத்தைக் கொத்தித் துளையை ஏற்படுத்துவேன். _____.
4. நான் இரவில் விழித்திருப்பேன். _____.
5. நான் அதிகாலையில் கூவி உங்களை எழுப்புவேன். _____.

3. கிளிக்கு வண்ணம் தீட்டி, பாகங்களைக் குறிக்க.



4. உங்கள் பெருவிரல் அச்சினால் உருவங்களை நிறைவு செய்க.



வீட்டு விலங்குகள்

உற்றுநோக்கிக் கலந்துரையாடுவோம்

பசு, காளை, ஆடு, நாய், பூனை, கோழி, வாத்து முதலிய விலங்குகள் நம்மோடு வீட்டிலும் பண்ணைகளிலும் வாழ்கின்றன. நாம் அவற்றைப் பராமரிக்கிறோம். அவை நமக்குப் பல்வேறு வழிகளில் உதவுகின்றன. இவற்றை வீட்டு விலங்குகள் என அழைக்கிறோம்.

பசு



புல் மேயும்.



கன்று ஈனும்.



கன்றுக்குப் பாலூட்டும்.



நமக்குப் பால் தரும்.



நம்மோடு நட்பாய்ப் பழகும்.



காளைகள் வயலை உழுவதற்கு உதவுகின்றன.

பசுவின் பாகங்கள்.





செய்து கற்போம்

1. பாகங்களைக் குறிக்க.



குளம்பு காது

வால் கொம்பு

2. இலைகளைப் பயன்படுத்தி உருவாக்குக.



3. மாட்டுப்பொங்கலன்று காளையை அலங்கரிக்க.







மலைப்பாம்பு

காட்டு விலங்குகள்

சில விலங்குகள் காட்டில் வாழ்கின்றன. அவற்றைக் காட்டு விலங்குகள் என அழைக்கிறோம். பாலுவின் குடும்பத்தினர், முதுமலைப் புலிகள் காப்பகத்திற்குச் சென்றனர். அவர்கள் அங்கே படத்தில் உள்ள விலங்குகளைப் பார்த்தனர்.



புலி



குரங்கு



சிறுத்தை



இருவாச்சி



கழுகு



மான்



யானை



முதலை



கரடி



நரி





காட்டு விலங்குகளைக் குறித்துக் கலந்துரையாடவும்.

செய்து கற்போம்

1. விலங்குகளின் தோல் வடிவமைப்பை வரைந்து பெயரை எழுதுக.









2. பத்து விலங்குகளின் பெயர்களைக் கண்டுபிடிக்க.

ம	லை	ப்	பா	ம்	பு	க	லை	னை	மா
தை	த்	க	ர	டி	ன்	ழு	சி	லி	இ
று	று	ர	இ	று	மா	கு	யா	பு	த்
த்	ர	க	ரு	யா	ரு	சி	ன்	ச்	ரு
தை	கு	மா	வா	ங்	த்	கு	ர	ங்	கு
ந	ரி	ன்	ச்	ழு	லை	மா	லி	ழு	மா
ர	த்	ங்	சி	று	த்	தை	ர	னை	சி
லை	க	லி	க	பு	யா	மு	த	லை	த்
யா	னை	ழு	ர	லி	ங்	கு	ன்	ர	லி



கற்றல் பயணம்

1. பறவையின் பாகங்களைக் குறிக்க.



அலகு, இறக்கை, வால், கூர் நகங்கள்

2. ஆடு மற்றும் மீனின் இரண்டு பாகங்களை எழுதுக.





துடுப்பு, கொம்புகள், குளம்புகள், செதில்கள்

3. படத்தைப் பார்த்துக் கூறுக.



1. இந்தச் சிறிய விலங்கின் பெயரைக் கூறுக.
2. இது எவ்வாறு நகரும்?



நான் கற்றவை

- விலங்குகளில் பல வகைகள் உள்ளன என்பதை அறிந்து கொண்டேன்.
- என்னால் சில விலங்குகளின் பாகங்களைக் குறிக்க முடியும்.
- பல்வேறு விலங்குகள், எங்கு வாழ்கின்றன, அவை எவ்வாறு இயங்குகின்றன என்பதை அறிந்து கொண்டேன்.

நானே செய்வேன்

1. ஊர்ந்து செல்லாத விலங்கை வட்டமிடுக.



நத்தை



வெட்டுக்கிளி



மண்புழு

2. நீரிலும் நிலத்திலும் செல்ல, வாத்திற்கு உதவும் உறுப்பை வட்டமிட்டு எழுதுக.



_____

3. படத்தைப் பார்த்து, நிழலை முழுமைப்படுத்துக.



4. படங்களை 1 முதல் 4 வரை எண் இட்டு வரிசைப்படுத்துக.



☐



☐



☐



☐

5. காற்றையும் நீரையும் அசுத்தப்படுத்தும் செயல்களுக்கு ● வண்ணமிடுக.







6. வாய்மொழி வினாக்கள்

அ) உங்கள் வகுப்பினருடன் பூங்காவிற்குச் செல்லும்பொழுது பூங்கா, தூய்மையாக இருக்கக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வழியைப் பகர்க.

ஆ) வீட்டு விலங்குகளுக்கும் காட்டு விலங்குகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?

7. செயல்திட்டம்

அ) உங்கள் வீட்டில் காணப்படும் மிகச்சிறிய உயிரினங்கள் மூன்றின் பெயரை உற்றுநோக்கி எழுதுக. அவற்றின் பொருத்தமான இயக்கத்திற்கு (✓) குறியிடுக.

விலங்கு	நடப்பன	ஊர்வன	பறப்பன	தாவுவன

ஆ) வீட்டில் உள்ள மண்ணாலான ஒரு பொருளைக் கண்டறிந்து அதனை வரைக. அப்பொருளின் பெயரையும் அதன் பயனையும் ஆசிரியரிடம் கூறுக.

திறம்பட இயங்கு! தெளிவாகச் சிந்தி!

நாள்தோறும் குழந்தைகளின் கவனக் குவிப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் வாரத்திற்கு ஒரு பயிற்சி வீதம் ஐந்து நிமிடங்கள் செய்ய வைக்க வேண்டும்.

1.



நின்ற இடத்தில் இரண்டு முறை நடை போடவும்.



இடது கையைப் பக்கவாட்டில் நீட்டியபடியும் வலது கையை உயர்த்தியபடியும் இடதுபுறமாக இரண்டு அடிகள் எடுத்து வைக்கவும்.



நின்ற இடத்தில் இரண்டு முறை நடை போடவும்.



வலது கையைப் பக்கவாட்டில் நீட்டியபடியும் இடது கையை உயர்த்தியபடியும் வலப்பக்கமாக இரண்டு அடிகள் எடுத்து வைக்கவும்.

2.



உங்கள் கைகளை நீட்டி, உங்கள் உடலை வலதுபுறமாகத் திருப்பவும்.



உங்கள் கைகளை நீட்டி, உங்கள் உடலை இடதுபுறமாகத் திருப்பவும்.



வலது கையைத் தலைக்குமேல் உயர்த்தி இடதுபுறமாகச் சாயவும். இடது கையை வயிற்றின்மீது வைக்கவும்.



இடது கையைத் தலைக்குமேல் உயர்த்தி, வலதுபுறமாகச் சாயவும். வலது கையை வயிற்றின்மீது வைக்கவும்.

3.



இரு கைகளின் ஆள்காட்டி விரல்களைக் கொண்டு சதுரங்களை வரைக.



இரு கைகளின் ஆள்காட்டி விரல்களைக் கொண்டு வட்டங்களை வரைக.



இரு கைகளின் ஆள்காட்டி விரல்களைக் கொண்டு செங்குத்தாக எண் 8-ஐ வரையவும்.

4.



உங்கள் கைவிரல்களை மடக்கி கைகளை வலமிருந்து இடமாக 3 முறையும் இடமிருந்து வலமாக 3 முறையும் சுழற்றவும்.

அமைப்புகளை நிறைவு செய்வோம்






















கற்றல் பயணம்

விலங்குகளின் பன்முகத்தன்மையை உணர்ந்து அவற்றைப் பல்வேறு வழிகளில் வகைப்படுத்துதல்.

ஒளி, காற்று, நீர் மற்றும் மண் ஆகியவை வாழ்க்கைக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை உணர்தல் மற்றும் அவற்றைப் பாதுகாக்கும் வழிகளைப் பின்பற்றுதல்.

வீடு, பள்ளி மற்றும் சமுதாயத்தின் பாதுகாப்பு விதிகளைப் புரிந்துகொண்டு பின்பற்றுதல்.

ஐம்புலன்களைப் பயன்படுத்திப் பொருள்களை வகைப்படுத்துதல்.

சக மாணவர்களுடன் இணைந்து செயல்படுதல், பல்வேறு சூழ்நிலைகளில் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளுதல்.

குடும்பத்தின் அன்றாடப் பணிகளில் பங்கேற்பதுடன் முதியவர்களுக்கு உதவுதல்.



இரண்டாம் வகுப்பு - கணக்கு - முதல் பருவம்
பாடநூல் உருவாக்கக் குழு

பாட வல்லுநர்

முனைவர் இரா. இராமானுஜம்,
முன்னாள் பேராசிரியர்,
கணித அறிவியல் நிறுவனம் (IMSc), சென்னை.

மேலாய்வாளர்கள்

இரா. ஆத்மராமன் ,
கணிதக் கல்வி ஆலோசகர்,
இந்திய கணித ஆசிரியர்கள் சங்கம், சென்னை-05.

சோ. விஜயராகவன்,
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

நூலாசிரியர்கள்

திருமதி. பா. தமிழ்ச்செல்வி,
பாட ஒருங்கிணைப்பாளர்,
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயற்சி நிறுவனம், களியாம்பூண்டி, காஞ்சிபுரம்.

முனைவர் தெ. காசி,
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்.

பி. பிரசன்னா,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, வீரப்பன்சத்திரம், ஈரோடு.

தி.விஜயா,
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வல்லம் பேடுகுப்பம், திருவள்ளூர்.

க. பிரியா,
ஆசிரியர் பயிற்றுநர், வட்டார வளமையம், கோடம்பாக்கம்.

ரா. கவிதா,
இடைநிலை ஆசிரியர், விருதுநகர் இந்து நாடார் ஆரம்பப்பள்ளி, மதுரை தெற்கு ஒன்றியம், மதுரை மாவட்டம்.

மேரி கிரீனா பி. சே,
இடைநிலை ஆசிரியர், புனித அலோசியஸ்
தொடக்கப்பள்ளி, மார்த்தாண்டன் துறை, கன்னியாகுமரி.

சு. ரேணுகாதேவி,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப்பள்ளி, கா.பள்ளிவாசல்,
திருமயம் ஒன்றியம், புதுக்கோட்டை.

த. உஷாநந்தினி,
இடைநிலை ஆசிரியர், நகராட்சி துவக்கப்பள்ளி,
தூக்கணாம்பட்டி, சேலம்.

ஆ. முருகேசன்,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய
தொடக்கப்பள்ளி, பிள்ளையார் நத்தம், ஸ்ரீவில்லிபுத்தூர்
ஒன்றியம், விருதுநகர்.

ஆ.ச.சம்சாத் பானு,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப்பள்ளி, ஈசநத்தம்,
அரவக்குறிச்சி ஒன்றியம், கரூர்.

மெய்ப்புத் திருத்துநர்

நா. வி. பூர்ணிமா தேவி,
பட்டதாரி ஆசிரியை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

மின்னுரு பாடப்பொருள் உருவாக்கக் குழு

பா. மேக்டலின் பிரேமலதா,
மின்னுரு பாடப்பொருள் ஒருங்கிணைப்பாளர்,
பட்டதாரி ஆசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை மாவட்டம்.

ஆ ஷோபனா ரதி,
பட்டதாரி ஆசிரியர், ஊ.ஒ.ந.நி.பள்ளி,
பேரூர் செட்டிப்பாளையம், தொண்டாமுத்தூர் ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

ச. ஆனந்தபாபு,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப்பள்ளி, பெரிய வெளிக்காடு,
இலத்தூர் ஒன்றியம், செங்கல்பட்டு மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர், பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம், சென்னை.

இரா. மனோகர், வடிவமைப்பாளர்

கை. பேச்சிமுத்து, வடிவமைப்பாளர்

வரைபடம்

சீ. தியாகராஜன்,
ஓவிய ஆசிரியர், தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளி
பெரம்பூர், சென்னை -11

சு. வேல்முருகன்,
ஓவிய ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

இரண்டாம் வகுப்பு – சூழ்நிலையியல் – முதல் பருவம்
பாடநூல் உருவாக்கக்குழு

பாட வல்லுநர்கள்

பேராசிரியர். சுல்தான் அகமது இஸ்மாயில்,
சூழலியலாளர் மற்றும் மண் உயிரியலாளர், சென்னை.

மருத்துவர். சுசித்ரா ராம்குமார்,
உபாசனா கற்றல் மற்றும் நலவாழ்வு மையம்,
அடையார், சென்னை.

மேலாய்வாளர்கள்

நா. ரெ. மகாலிங்கம், விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

தெ. அசோக், முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
மீஞ்சூர் ஒன்றியம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

முனைவர். சீ. பிரபு, பாட ஒருங்கிணைப்பாளர்,
துணை இயக்குநர் (பாடத்திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

ரா. சரண்யா, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

ஜெ. இராதாமணி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

மு. தாமரைச்செல்வி, பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, மைக்குடி,
திருமங்கலம் ஒன்றியம், மதுரை மாவட்டம்.

சே. பாண்டிச் செல்வி, பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, திருமோகூர், மதுரை கிழக்கு ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

மூ. மகாதேவன், பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, சோமாத்தூர்,
மானாமதுரை ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.

இரா. பிரபாகரன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, நல்லாம்பாளையம்,
எலச்சிபாளையம் ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.

மா. வனிதா சாந்தகுமாரி, இடைநிலை ஆசிரியர்,
CSI தொடக்கப்பள்ளி, சோழவந்தான்,
T. வாடிப்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

கோ. சரவணமுத்து, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி , தே. இடையப்பட்டி,
கடவூர் ஒன்றியம், கரூர் மாவட்டம்.

நா. கலைவாணி, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யப்பன்தாங்கல்,
குன்றத்தூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்.

மெய்ப்புத்திருத்துநர்

முனைவர். நா. வளர்மதி, முதல்வர் (பொ),
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, வேலூர்.

மின்னுரு பாடப்பொருள் உருவாக்கக் குழு

பா. மேக்டலின் பிரேமலதா, பட்டதாரி ஆசிரியர்,
ஒருங்கிணைப்பாளர் (மின்னுரு பாடப்பொருள் குழு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

கு. பாலமுருகன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, நல்லூர், வலங்கைமான் ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.

மா. அறிவழகன், ஓவிய ஆசிரியர்,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
வலசையூர், சேலம் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

ம. அமல்ராஜ்
வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர், பட்டதாரி ஆசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

ப.யோகேஷ், வடிவமைப்பாளர்
இ.ஜெ.கருணாகரன், வடிவமைப்பாளர்

வரைபடம்

பிரபுராஜ், D T M,
ஓவிய ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி,
மணிமங்கலம், காஞ்சிபுரம் மாவட்டம்.

இரா. ராஜேஷ்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட்
மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: